Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 27, 2024

வியாழக்கிழமை ஜூன் 27, 2024 | ஒளி: 09 கதிர்: 282 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# இன்று கண்டன சுகயீனம்

### மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்தே இன்றையதினம் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது

அதிபர்கள், ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ரணில்- ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து அதிபர், ஆசிரியர்கள், வியாழக்கிழமையும் (27) சுகயீன போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில்

# வெற்றி

- சிலர் ஜனாதிபதி பதவிக்காக பாடுபடுகின்றனர்
- நான் நாட்டுக்காக பாடுபடுகின்றேன்
- தொங்கு பாலத்திலிருந்து குழந்தையை அழைத்து வந்துள்ளேன்
- குழந்தைக்காக போராடுகின்றனர்
- பாதை தவறினால் ஆபத்து
- நம்பிக்கையும் வேலைத் திட்டமும் மட்டுமே என்னிடம் இருந்தது.
- குறுகிய கால தனித்துவமான வெற்றியைப் பெற்றதில்லை
- துரோகம் செய்வோர் அவமானப்படுவர்

இலங்கையின் பிரதான உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் புபுதன்கிழமை (26) காலைக் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் இறுதி உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இன்று பீஜிங்கில் இறுதி உடன்பாடு எட்டப்பட்டதோடு அது அதற்கான முறையான நடைமுறைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் இது நற்செய்தி என்று தெரிவித்த ஜனாதிபதி, சிலர் ஜனாதிபதி பதவிக்காகக் கடுமையாகப் பாடுபடும் நிலையில் தான் நாட்டிற்காகப் பாடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார். அவர்கள் தமக்குக் கிடைக்கும் பதவிகளைப் பற்றிக் கனவு காணும் போது, தான் நாட்டின் அபிவிருத்தியைப் பற்றிக் கனவு காண்பதாகவும் அவர் குறிப்பிட்டார். வியாழக்கிழமை (26) விசேட உரையொன்றை ஆற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முழுச் செய்தி P6



# கடன் மறுசீரமைப்புக்கு இறுதி இணக்கப்பாடு

இலங்கைக்குக் கடன் வழங்கிய நாடுகளுடனான இருதரப்பு கடன் மறுசீரமைப்பு தொடர்பான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.


இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பில் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் குழுவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# கட்டியணைத்த மகள் கம்பத்தில் மோதி பலி

தன்னுடைய தந்தை முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்றுக்கொண்டிருந்த போது, பின்னிருகையில் இருந்த மகள், தந்தையின் கழுத்தை இறுகக் கட்டியணைத்தமையால், அந்த முச்சக்கரவண்டி நிலைத்தடுமாறி,

தொடர்ச்சி P2



பழுதடைந்தது சொகுசு பேருந்து


# பின்னால் நின்றவர்களை பந்தாடியது பாரவூர்தி

### மூவர் பலி; இருவர் படுகாயம்: மாங்குளத்தில் கோரம்

**சண்முகம் தவசீலன்**

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் ஏ9 வீதியின் 228ஆவது கிலோ மீற்றர் பகுதியில் செவ்வாய்க்கிழமை (25) இரவு 11 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உடல் சிதறி உயிரிழந்தனர். அந்த விபத்தில் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2








# “வேண்டும், வேண்டும் சர்வதேச நீதி வேண்டும்”

**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி முல்லைத்தீவில் ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது இன்று வரை தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது

தொடர்ச்சியாக நீதி கிடைக்காத நிலையில் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆண்டுகளுக்கு மேலாக நீதி கோரி போராட்டம் மேற் கொண்டுவரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்

தொடர்ச்சி P2





அதிபர்கள், ஆசிரியர்களின்:

# சுகயீனத்தால் பாடசாலைகள் முழுமையாக முடங்கின

- கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்
- பேரணியை கலைக்க கண்ணீர்ப்புகை வீச்சு
- மாணவர்கள் வீட்டுக்குத் திரும்பினர்

அதிபர்கள், ஆசிரியர்கள், புதன்கிழமைம (26) சுகயீன விடுமுறையை அறிவித்ததன் காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகள் முற்றாக செயலிழந்தன.

தொடர்ச்சி P2



# ஆசன வாயில்களில் ‘தங்க ஜெல்’: 6 பேர் கைது

**டி.கே.ஜி.கபில**

தங்க ஜெல் உருண்டைகளை தங்களுடைய ஆசன வாயில்களை மறைத்து வைத்து கடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், 06 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், துபாயில் இருந்து சென்னைக்கு வந்து அங்கிருந்து செவ்வாய்க்கிழமை (25) பிற்பகல் 1.20 மணியளவில் இண்டிகோ எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

தமது பயணப்பொதிகள் மற்றும் ஆசனவாய்களில் மறைத்து வைத்தே,



தங்க ஜெல் உருண்டைகளை இவர்கள் கடத்தியுள்ளனர். இதன் உள்நாட்டு பெறுமதி, 18 கோடி ரூபாயாகும்.

தொடர்ச்சி P2

# “மாயையான பயணத்தில் கட்டியெழுப்ப முடியாது”



இன்றும் நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டு, ஒட்டுமொத்த நாடும் பொய்களால் வஞ்சிக்கப்பட்டு வருகிறது. கண்துடைப்பு நாடகமே அரங்கேற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் இதற்கு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “இணைய விளையாட்டுக்கு அடிமையாதல் மனநோயாகும்”

இணையம் அல்லது கணினி விளையாட்டுகளுக்கு அடிமையாதல் என்பது தற்போது மனநோயாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக நிபுணர் மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பின்னால் நின்றவர்களை பந்தாடியது பாரவூர்தி

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதிசொகுசு பேருந்து ஒன்று பழுதடைந்ததன் காரணமாக ஏ9 வீதியில் 228ஆவது கிலோமீற்றர் பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது.

பேருந்தில் வருகை தந்தவர்கள் பேருந்து பழுதடைந்ததன் பின்னர், இறங்கி பேருந்தின் பின்புறமாக நின்று கொண்டிருந்தனர். அப்போது, அதேதிசையில் வருகை தந்த பாரவூர்தி ஒன்று குறித்த நபர்கள் மீதும் பேருந்தின் மீதும் மோதியது.

பேருந்துக்குப் பின்புறமாக நின்றிருந்த நபர்களில் மூவர், பார ஊர்தியில் சிக்கித் தூக்கி வீசப்பட்டு உடல் சிதறி பலியாகியுள்ளனர்

பாரவூர்தியின் சாரதி, பேருந்தில் பயணித்த இன்னொருவர் என இருவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சம்பவ இடத்திற்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்று கண்டன சுகயீனம்

அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வை வழங்காது, தமக்குக் கிடைக்கவேண்டியதைக் கேட்கும் அதிபர், ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தை நசுக்க, நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி, அதிபர், ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்தே இன்றையதினம் (27) போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

அதிபர்கள், ஆசிரியர்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டிக்கும் விதமாக இன்றைய தினமும் ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# சுகயீனத்தால் பாடசாலைகள் முழுமையாக முடங்கின

"தங்களுடைய சம்பள முரண்பாடுகளைக் களைய வேண்டும்" உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சுகயீன விடுமுறையில் உள்ளதை அறியாமல் சில மாணவர்கள் தமது பாடசாலைகளுக்கு வந்து தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தபால் நிலையத்திற்கு வந்த பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு தங்களுடைய சுகயீன விடுமுறையைத் தந்தி ஊடாக அறிவித்தனர்.

இந்நிலையில், தங்களுடைய கோரிக்கை முன்வைத்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு அருகில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்க உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள், பேரணியாகச் சென்றனர். லோட்டஸ் வீதிக்கு அருகில் வழிமறித்த கலகமடக்கும் பொலிஸார், பேரணியைக் கலைப்பதற்காகக் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், பேரணிக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியிருந்த பொலிஸார், தடையுத்தரவு கோரிக்கையையும் முன்வைத்தனர். பிரதான பாதைகளில் பொதுமக்கள் அல்லது பாதசாரிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இந்நிலையில், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், வண. உலப்பனே சுமங்கல தேரர் மற்றும் எட்டு பேருக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறும் கோரியிருந்தனர்.

அதற்கு, தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மேலும், நிதி அமைச்சகம், ஜனாதிபதி செயலகம், இலங்கை மத்திய வங்கி மற்றும் ஜனாதிபதி மாளிகை போன்ற வளாகங்களுக்குள் நுழைவதற்கும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து. எனினும், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள பகுதியை நோக்கி, பேரணியாக சென்றுகொண்டிருந்த போதே, லோட்டஸ் வீதி சந்தியில் வைத்து, கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டு பேரணியைக் கலைத்துள்ளனர்.





# "வேண்டும், வேண்டும் சர்வதேச நீதி வேண்டும்"

புதன்கிழமை (26) முல்லைத்தீவு நகர சுற்று வட்டத்தில் நீதி கோரிய கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டனர்

"வேண்டும், வேண்டும் சர்வதேச நீதி வேண்டும்". "எங்கே எங்கே உறவுகள் எங்கே?". "இராணுவத்திடம் கையளித்த எங்களது உறவுகள் எங்கே"?. "வேண்டாம், வேண்டாம் ஓ எம்.பி. வேண்டாம்". உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் "கொலைக்காரனால் நீதி வழங்க முடியுமா?", "காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள்", "கொடுப்பனவுகளைக் கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே" , "உங்கள் இராணுவத்தை நம்பிக் கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படிக் காணாமல் ஆக்கப்பட்டார்கள்" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்திய வாரம் குறித்த போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டிருந்தனர் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில் சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம் ஐ.நா சபையில் எங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது இந்த நிலையில் நீதி கோரி போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். தமது பிள்ளைகளை உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள், இலங்கையில் ஓ.எம்.பி. அலுவலகத்தினால் நட்ட ஈடும் கொடுத்து மரண சான்றிதழும் கொடுக்கும் ஏற்பாடுகள் மக்களை விரட்டி விரட்டி செய்கின்றார்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தொடர்ச்சியாகக் கிராம உத்தியோகத்தர் ஊடாகவும் கிராம அமைப்புக்கள் ஊடாகவும் அழுத்தங்கள் கொடுத்தும் மக்களை மிரட்டுகின்றார்கள், இந்த பதிவுகள் செய்யாவிடின் எந்த ஒரு அரச பதிவுகளும் உதவிகளும் தரமுடியாது என்று பயங்கரமான மிரட்டல் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றது,

இந்த மிரட்டல்களைத் தாண்டி எமக்கான நீதி கிடைக்கவேண்டும், சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும், குற்றம் புரிந்தவர்களைச் சர்வதேச கூண்டில் ஏற்றி நீதி கிடைக்கவேண்டும், எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்றுதான் போராடி வருகின்றோம், எமக்கான நீதியினை சர்வதேசம் மட்டும்தான் தரவேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் தெரிவித்துள்ளார்கள்.










# "மாயையான பயணத்தில் கட்டியெழுப்ப முடியாது"

365 நாட்களும் 24 மணி நேரமும் பொய் சொல்வதையே வழக்கமாகவும், தொழிலாகவும் கொண்டு மக்களை ஏமாற்றும் இவ்வேளை, கோயபல்ஸ் கோட்பாடு நாட்டில் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி, இருக்கும் ஒன்றை இல்லையென்று சொல்லி, பொய்யை உண்மையாக்கி, உண்மையைப் பொய்யாக்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான மாயையான பயணத்தில் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றார்.

ஹிட்லரின் கோயபல்ஸ் ஆட்சியில் பொய்களைத் திரும்பத் திரும்பச் சொல்லி பொய்யை உண்மையாக்கினர். இத்தகைய கோட்பாடு இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால், நாட்டின் உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கசப்பான உண்மையை இந்நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும். எமது நாடு 92 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடனில் சிக்கித் தவிக்கிறது. இந்த கடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைக் கொண்டுள்ளது. இந்த கடன் தொடர்பில் அறியும் உரிமை மக்களுக்கு இருக்கிறது என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கம்பஹா, பியகம, பமுனுவில மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூன் 26ஆம் திகதி இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து வெளியே வந்தால், சர்வதேச மூலதனச் சந்தைகளில் கடன் பெறும் வாய்ப்பைப் பெறும். இது குறித்து குடிமக்கள் தகவல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆட்சியாளர்கள் சரியான தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும்.

வரிச்சலுகை வழங்கி நாட்டை கட்டியெழுப்பலாம் என்று அன்று ஆட்சியாளர்கள் கூறினர். இதன் விளைவாக எமது நாடு பொருளாதார மரணப் பொறியில் சிக்கியது. நாட்டின் பொருளாதாரம் எல்லா வகையிலும் சீர்யின்மைக்கு இட்டுச் செல்லப்பட்டு வங்குரோத்தையடைந்தது. அந்தப் பொய்யை ஏற்றுக்கொண்டதால் நாடு முற்றாக வீழ்ச்சியடைந்தது. இன்றும் அந்தப் பொய்யை மீண்டும் சொல்ல அரசாங்கம் தயாராகியுள்ளது.

மக்களை ஏமாற்றி பொய்களால் முன்னோக்கி நகர்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. பொய்களால் இனியும் எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. உண்மை மற்றும் காரண காரிய நிலையை அடிப்படையாகக் கொண்டு நாடு முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# ஆசன வாயில்களில் 'தங்க ஜெல்': 6 பேர் கைது

கைதானவர்கள், கல்முனை, மூதூர், கொழும்பு-10, கல்கெடிஹேன், மினுவாங்கொடை ஆகிய இடங்களில் வசிப்பவர்களும், அடிக்கடி விமானம் பயணங்களை மேற்கொள்பவர்கள், அவர்களில் 30 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆறு பேர் உள்ளனர்.

அவர்களில் 4 பேர் மலக்குடலில் தங்க ஜெல் உருண்டைகளை மறைத்து வைத்திருந்ததாகவும், மேலுமிருவர் 22 தங்க ஜெல் உருண்டைகளில் 08 கிலோ 632 கிராம் எடையுள்ள தங்க ஜெல்களை மறைத்து வைத்திருந்ததாகவும் விமான நிலைய சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



# கடன் மறுசீரமைப்புக்கு இறுதி இணக்கப்பாடு

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான பாரிஸ் கழக கூட்டத்தின் போது (PARIS Forum) இந்த இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாக ஷெஹான் சேமசிங்க X பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் சீனா இடையிலான இருதரப்பு கடன் மறுசீரமைப்பை ஏற்படுத்திக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருவதாக இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கிய இந்தியா, ஜப்பான் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கைய எதிர்நோக்கியுள்ள கடன் நெருக்கடிக்குத் தீர்வு காண இது முக்கிய திருப்புமுனையாக அமையும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கான தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும் ஷெஹான் சேமசிங்க பாராட்டியுள்ளார்.

# "இணைய விளையாட்டுக்கு அடிமையாதல் மனநோயாகும்"

இணையத்தில் கம்ப்யூட்டர் விளையாட்டுகளுக்கு அடிமையாக இருப்பது போதைக்கு அடிமையாவதற்கு ஒப்பானது என்றார்.

தொடர்ந்து இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகக் குழந்தைகள் இணையத்தில் இருந்தால் அவர்களுக்கு ஏற்படும் உளவியல் பாதிப்புகள் மிக அதிகமாக இருக்கும் என நிபுணர் டாக்டர் குறிப்பிட்டுள்ளார் .

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கைத்தொலைபேசி மற்றும் கணினி வழங்கக்கூடாது என்றும் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் பெற்றோரின் கடுமையான கண்காணிப்பில் வழங்கப்பட வேண்டும் என்றும் ரூமி ரூபன் கூறினார்.

கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையானவர்களுக்கு இவ்வாறான சாதனங்களை வழங்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கணினிகளுக்கு அதிகம் அடிமையாகி இருந்தால், முதல் கட்டத்திலேயே அவர்களை மீட்க வேண்டும் என குறிப்பிட்ட நிபுணர் வைத்தியர், பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் சிறுவர்கள் வீடியோ விளையாட்டுக்களுக்கு அதிகம் அடிமையாகி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து வீடியோ விளையாட்டுக்களைப் பார்ப்பதன் மூலம் குழந்தைகளின் நடத்தை வன்முறையாக மாறுவது விசாரணையில் தெரியவந்துள்ளதாகக் கூறிய ரூபன், இதுபோன்ற செயல்களுக்கு அடிமையான குழந்தைகளின் பெற்றோர்கள் கூட அவர்களை எதிரிகள் கூட்டமாகவே பார்க்கின்றனர் என்றார்.

இணையம் மற்றும் வீடியோ விளையாட்டுகளில் இருந்து குழந்தைகளைக் காப்பாற்ற சிறப்பு அறிவியல் திட்டத்தை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கட்டியணைத்த மகள் கம்பத்தில் மோதி பலி

மின்கம்பத்தில் மோதி விபத்துக்கு உள்ளானது. இதில், அச்சிறுமி பலியானதுடன், தந்தை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இக்கோர சம்பவம், நீர்கொழும்பு, திவுலப்பிட்டிய, கடவல பிரதேசத்தில், செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றுள்ளது என திவுலபிட்டி ய பொலிஸார் தெரிவித்தனர் .

நீர்கொழும்பில் வேலைக்குச் செல்லும், தன்னுடைய மனைவியை இறக்கிவிடுவதற்காக, வீட்டிலிருந்து முச்சக்கரவண்டியில் ஏற்றிக் கொண்டார். அப்போது, அவர்களின் மகள் மற்றும் பாட்டி ஆகியோரும், ஏறிக்கொண்டனர். மனைவியை இறக்கிவிட்டதன் பின்னர், தனது பாட்டியுடன் பின்புறம் இருக்கையில் மகள் அமர்ந்துகொண்டு பயணித்துள்ளார்.

முச்சக்கரவண்டி கடவல பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த போது, தன்னுடைய தந்தையின் கழுத்தை அச்சிறுமி இறுகக் கட்டிப்பிடித்துள்ளார். இதன்போது, தந்தையால் முச்சக்கரவண்டியை கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியுள்ளது.

அதன்போது தூக்கி வெளியே வீசப்பட்ட சிறுமி, மின்கம்பத்தில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார். சாரதியான தந்தையும் காயமடைந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில், சிறுமி உயிரிழந்தார். மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு தந்தை மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்,தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

## மதுபானசாலைக்கு கடும் எதிர்ப்பு:

# 15 பேருக்கு விளக்கமறியல்

■ ஏ.எம்.கீத்

மூதூர்-இருதயபுர மதுபானசாலைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, செவ்வாய்க்கிழமை(25) கைது செய்யப்பட்ட 15 பேரும் நீதிமன்ற உத்திரவின் பிரகாரம், ஜூலை 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இருதயபுரம் பகுதியில், மதுபானசாலை திறக்கப்பட்டதை அடுத்து, அதில் அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், 15 நபர்களை செவ்வாய்க்கிழமை(25) பொலிஸார் கைது செய்தனர்.



கைது செய்யப்பட்டவர்களில் 11 ஆண்களும் 4 பெண்களும் அடங்குவர். இதில் 5 ஆண்களை பாதுகாப்பு நிமித்தம் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த அமைதியின்மை சம்பவத்தில் இரு பொலிஸார் மற்றும் பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில், திருகோணமலை மாவட்ட மூதூர் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூதூர் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் புதன்கிழமை(26) முன்னிறுத்தப்பட்டனர். அவர்களை, எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அனுமதி இன்றி ஒன்று கூடியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாரை தாக்கியமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்டனர்.

## மின்சாரம் தாக்கியதில் மாணவன் உயிரிழப்பு



அநுராதபுரம்- கல்கிரியாகம, திக்வெண்ணாகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவன் செவ்வாய்க்கிழமை (25) பிற்பகல் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சேனவிரத்ன முதியன்செலாகே பசிந்து காஞ்சன என்ற 17 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவனின் சடலம் தம்புள்ளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேதப் பரிசோதனை புதன்கிழமை (26) இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் , சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிரியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாகன விபத்தில் சிறுமி பலி


களுத்துறை - மத்துகம பிரதான வீதியின் ரேந்தைபோல பகுதியில், முச்சக்கரவண்டியுடன் மோதிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு இளம் சகோதரிகள் படுகாயமடைந்துள்ளதுடன், அதில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தொடங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்தில் தொடங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளார்.

மற்றைய, 14 வயதுடைய சிறுமி நாகொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமிகள் இருவரும் கடைக்குச் செல்வதற்காக, வீதியில் பயணித்த போது, களுத்துறையிலிருந்து மத்துகம நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## மலர்ச்சாலை உரிமையாளர் அமரர் ஊர்தியில் படுகொலை



மலர்ச்சாலை உரிமையாளர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலர்ச்சாலை வர்த்தக நிலையத்தின் உரிமையாளரின் தலையில் தாக்கிய இனந்தெரியாத நபரே இந்தக் கொலையைச் செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


அமரர் ஊர்தியின் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்த நிலையிலேயே மலர்ச்சாலை உரிமையாளர் கொல்லப்பட்டதுடன், 46 வயதான இவர், நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

இறுதி சடங்கு மண்டபத்தில் பணிபுரியும் ஒருவரை அழைத்துக் கொண்டு தெல்வத்த-அவஸவத்தை பகுதிக்கு செவ்வாய்க்கிழமை (25) இரவு சென்றுள்ளார்.

வழியிலேயே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மரத்தில் ஏறியவர் மரணம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்



ஓட்டமாவடி - நாவலடி பகுதியில் மா மரமொன்றில் ஏறிய நபர், தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி - மாஞ்சோலை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய பாறூக் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாவலடியிலுள்ள தனது வளவினுல் இருக்கும் மாமரத்தில் ஏறியபோது தவறி விழுந்த குறித்த நபர் , படுகாயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## போலி தாள்களுடன் மாணவன் கைது



தம்புத்தேகம பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்த பாடசாலை மாணவன், போலி நாணயத்தாள்களுடன் கைது செய்யப்பட்டதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நொச்சியாகம-உடுநுவர கொலனியைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புத்தேகம பேருந்து நிலையத்திற்கு அருகில், செவ்வாய்க்கிழமை (25) பிற்பகல் சந்தேகத்துக்கு இடமான முறையில் மாணவன் நின்றுகொண்டிருந்ததை அவதானித்த பொலிஸ் உத்தியோகத்தர், மாணவனை அழைத்துச் சோதனையிட்ட போது, அவரிடமிருந்து போலி 500 ரூபாய் நாணயத் தாள்கள் ஆறு கைப்பற்றப்பட்டன.

பின்னர், பொலிஸாரால் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து, குறித்த மாணவனின் வீட்டை சோதனையிட்டபோது போலி நாணயத்தாள்களை அச்சடிக்கும் கருவிகளை கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

நிவிதிகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாதகட பகுதியில் நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகத்திற்குள்ளாகி காயமடைந்துள்ளார்.

திக்கோவிட்ட வத்த, பாதகட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் தனது மருமகனுடன் வீட்டு முற்றத்திலிருந்த போது, முகத்தை மறைத்து அருகில் வந்த இனந்தெரியாத ஒருவர், இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் காலில் காயம் ஏற்பட்ட நிலையில், நிவித்திகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என தெரிவித்த பொலிஸார் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை நடத்தவும்

ஜனாதிபதி தேர்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய அரச அதிகாரிகள் மற்றும் அரச வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் தேர்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதில் பங்குபற்றக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கை தொடர்பில் உரிய ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த கணக்கெடுப்பு மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக நடத்தப்படவுள்ளது.

அரச நிறுவனங்களின் வாகனங்கள் குறித்த தகவல்களும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. அதற்கான விசேட படிவமும் வெளியிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'சர்வதேச பிரிந்த ஆத்மாக்கள் தினம்'



'மனிதனுக்கு சேவை செய்வதே மனிதனின் இறுதிக் கடமையாகும்' என்ற தொனிப் பொருளுக்கு இணங்க, இரவு, பகல் பார்க்காது எந்த சந்தர்ப்பத்திலும் எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் செய்திகளை சேகரித்து மக்களுக்கு கொண்டு சேர்க்கும் ஊடக நிறுவனங்களின் பணியாற்றும் மற்றும் பொறுப்புக்களில் ஈடுபட்டுள்ள சகல ஊடகவியலாளர்களுக்கும் விஷேட அடையாள அட்டைகள் 'சர்வதேச பிரிந்த ஆத்மாக்கள் தினம்' கொண்டாடப்பட்ட வேளையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு, இலங்கை மன்றக் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை(25) காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை ஸ்ரீலங்கா மனித உரிமைகள் அமைப்பினால் நடத்தப்பட்டது.

மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் M.N.M அஷீம் ஏற்பாட்டால் ஒழுங்குச் செய்யப்பட்டிருந்தது. இதில் பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் கித்சிரி ராஜபக்ஷ கலந்து கொண்டார்.










### அதிபர், ஆசிரியர்களுக்கு சுகயீனம்...


தங்களுடைய சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக்கோரி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் புதன்கிழமை(26) நாடளாவிய ரீதியில் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

– மலையக நிருபர்கள்














# சட்டம் மெத்தனமாக அமுல்படுத்தும்வரை விபத்துகளை தடுக்க முடியாது

இப்படி விபத்துகள் நடந்தால், நாட்டின் மக்கள் தொகையில் பாதிப் பேர் சில நாட்களிலேயே பலியாகிவிடுவார்கள். மற்றொரு பாதிப் பேர் நிரந்தரமாக ஊனமுற்றவர் மற்றும் நோய்வாய்ப்பட்ட படுக்கையில் இருப்பார்கள். இது நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு பயங்கரமான படத்தை உருவாக்குகிறது. ஆனால், அதுதான் யதார்த்தம்.

மாங்குளம் - பனிக்கன்குளம் பகுதியில் ஏ9 வீதியின் 228ஆவது கிலோமீற்றர் பகுதியில் செவ்வாய்க்கிழமை (25) இரவு 11 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந்ததோடு, இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அன்றையதினம், நாட்டின் பல பாகங்களில் ஆங்காங்கே இடம்பெற்ற விபத்துகளில் பலர் மரணமடைந்ததுடன், பலரும் காயமடைந்தனர்.

போக்குவரத்து விபத்துகள், புள்ளிவிபரங்கள் வருவது மிகவும் கடினம். ஏனென்றால், நாங்கள் இதை எழுதுவதற்கும் நீங்கள் இதைப் படிக்கும் நேரத்திற்கும் இடையில் புள்ளிவிபரங்கள் நிறைய மாறக்கூடும். இந்த நாட்டில் வீதி விபத்து இல்லாத ஒரு நாள் இல்லை, மணிநேரம் அல்லது வினாடி கூட இல்லை. நாட்டில் நாளொன்றுக்கு ஏழு அல்லது எட்டு குடிமக்கள் வீதி விபத்துக்களால் உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் மூலம் தெளிவாகிறது.

சமூகவியலின் படி, அந்தச் சமூகத்தின் இருப்புக்கு ஏதாவது தீவிரமாகச் சவால் விட்டால் அது ஒரு சமூகப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதன்படி, வீதி விபத்துகள் ஒரு தீவிர சமூகப் பிரச்சினையாகும். இவ்வளவு பாரதூரமான சமூகப் பிரச்சினையாக இருந்தும் வாகன விபத்துக்கள் தொடர்பில் தேவையான அளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியே. வீதி விபத்துகளைக் குறைப்பது என்பது முடியாத காரியம் அல்ல. கண்டிப்பாக முடியும். ஆனால், அதற்கு முழு நாட்டையும் ஒருங்கிணைக்கும் ஒரு மேம்பட்ட அறிவியல் திட்டம் தேவை.

வீதிகளின் மோசமான நிலையும் வீதி விபத்துகளுக்கு முக்கிய காரணமாக உள்ளது. இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில், வீதிகளில் மற்றும் நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் ஓடுவதை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும். நாட்டின் ஏனைய வீதிகளுடன் தொடர்புடைய நெடுஞ்சாலைகளின் நிலையைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. நெடுஞ்சாலைகள், வீதிகள் அமைப்பைப் பராமரிப்பது இந்த நாட்டின் எதிர்காலத்தில் மிகக் கடுமையான பிரச்சினையாகும். இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குடிமகனின் பொறுப்பு குறித்த சரியான அறிவு இல்லாமல், வாகன விபத்து பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியாது. குடிமக்களின் மனப்பான்மையை வளர்க்க ஒரு மேம்பட்ட திட்டம் தொடங்கப்பட வேண்டும்.

2023ஆம் ஆண்டில் 2,200 விபத்துகளில் 2,310 மனித உயிர்கள் பலியாகியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அதன்படி, நாட்டில் நாளொன்றுக்கு வீதி விபத்துக்களால் 6க்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பலியாகியுள்ளன. இந்த நிலை மாறும் என எதிர்பார்க்க முடியாது. அது மாறவேண்டுமானால், கடுமையான தவறு செய்யும் வாகன ஓட்டிகள் மீது சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும். ஆனால், கடுமையான தவறுகளைச் செய்யும் சில ஓட்டுநர்கள் மீதும், சட்டம் மெத்தனமாக அமுல்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். நிலைமையைச் சரி செய்யாமல், தேர்வுக் குழுக்களை நியமித்து, எத்தனை அறிக்கைகள் பெற்றாலும், பலனில்லை.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அனேகமான காதலர்களில் ஒருசிலரின் காதல் தானாக உருவாகுவதில்லை. நண்பர்கள், தோழிகள் மற்றும் நெருங்கிய உறவுகள் உருவாக்கிவிடுகின்றார்கள். வலிந்து புகுத்தப்படும் காதல் நிலையாக இருக்குமா? என்பது கேள்விக்குறியது.

நண்பர்களில் சிலர் தங்களின் உறவுக்கார ஆண் அல்லது பெண்களை தங்களது நட்பைக்காட்டி, தங்கள் நண்பனுக்குச் சேர்த்து வைத்தும் விடுகின்றார்கள். இதுகூட ஒரு கட்டாயக் காதல்தான்!

முன்னேற வேண்டிய அநேகமான இளைஞர், யுவதிகள் தங்கள் எதிர்காலத்தை மறந்து காதல் வலையில் புகுந்து கொள்கின்றார்கள்.

படித்து நல்ல நிலைக்கு வருமுன் காதலிப்பதே ஒரு கௌரவம் என எண்ணிப் பெற்றோர் நிலையையும் கருதாமல் திருமணம் புரிந்து அல்லல்படுவது நாங்கள் அறிந்த விடயம்.

பொறுமை, நிதானம், குடும்ப பொறுப்பை உணராமல், அண்ணன், திருமணமாகாத அக்கா, தங்கைமார் பற்றி எவ்விதமான கடமைகளையும் செய்யாமல் தப்பித்துக் கொள்வதும் சுயநலம் அல்லவா? கண்மூடித்தனமான காதல் இயல்புக்கு முரணானது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இனப் பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிட்டும்?

– முருகானந்தம் தவம்

இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவையே இறுதி வரை நம்பியிருப்பதாகவும் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைப்பதற்காக ஓரணியாக அஹிம்சை வழியில் போராடி வருவதாகவும் இந்தியாவுக்கு கூறி வந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு முன்பாகவே தங்களுக்கிடையிலான முரண்பட்ட போக்குகளையும் ஒற்றுமைப்படாத தலைக்கன அரசியலையும் அரச விசுவாசத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டனர்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு இந்தியாவில் மீண்டும் பதவியேற்றுள்ள நிலையில், இலங்கைக்குத் தனது முதல் விஜயத்தை கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை மேற்கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரச தரப்பினருடனான சந்திப்புக்கு மேலதிகமாக அவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது மகன் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் மலையக தமிழ் கட்சிகளுடன் அவசர சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

இதில், இந்தியத் தூதரகத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்குமிடையில் நடந்த சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஸ்ரீதரன், சம்பந்தனுக்குப் பதிலாக இரா.சாணக்கியன் ஆகியோரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்திய சார்பில் அமைச்சருடன் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் தூதரக உயரதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்த சந்திப்பின் போதே சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும் அதேவேளை, தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராகவும் சுமந்திரன் தரப்பும் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக ஸ்ரீதரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், விக்னேஸ்வரன் தரப்பும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் தமிழ் பொது வேட்பாளருக்கும் எதிராக கஜேந்திரன் தரப்பும் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு முன்பாகவே முட்டி மோதி தங்களைப்போலவே அவரையும் குழப்ப நிலைக்குள் தள்ளிவிட்டு வந்துள்ளனர்.

இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்ரீதரன் எம்.பி. தனது கருத்தை முன் வைக்கையில், இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக நாம் அடைந்த அடைவு மட்டம் மிகவும் குறைவானது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் அரசியல் ரீதியானது 13ஆவது திருத்தம் சட்ட ரீதியானது. இவை இரண்டையும் தனித்தனியாகக் கையாளும் விடயமே தற்போது நடைபெறுகின்றது. அதனால் தான் எந்த அடைவு மட்டமும் இல்லாதுள்ளது. இது ஆரோக்கியமான விடயமல்ல. எனவே, இவ்விரு விடயங்களையும் ஒரே மேசையில் வைத்துப்பேச வேண்டும். அப்போதுதான் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடியதாகவிருக்கும் அதற்கு இந்தியாதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள தமிழர்களை, சிங்களவர்கள் இந்தியாவின் முகமாகவே பார்க்கின்றார்கள். நாம் எதையாவது கூறினால் கூட, இதில் இந்தியாவின் பின்னணி இருக்கின்றதா என்றே பார்க்கின்றனர். இந்தியாதான் எமக்குப் பாதுகாப்பு. நாம்தான் இந்தியாவுக்குப் பாதுகாப்பு. ஆகவே, இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா இன்னும் கூடுதல் கரிசனை காட்ட வேண்டும். அத்துடன், தமிழ் மக்களைத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றார்கள். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்து தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்களிடமும் தமிழ் மக்களிடமும் தீவிரமடைந்துள்ளதுடன், அதற்கான ஆதரவும் அதிகரித்துள்ளது. இதற்கு நான் எனது முழுமையான ஆதரவை வழங்குவேன் என குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ஸ்ரீதரனின் இந்தக் கருத்துக்கு மறுத்தான் கொடுத்த இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இதமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் தரப்புக்களிடம் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இந்த தமிழ் பொது வேட்பாளரை நான் ஆதரிக்கவில்லை ஏனெனில், இது நடைமுறைக்கு சாத்தியமற்றது என கூறிவிட்டு ஜனாதிபதி வேட்பாளர்களான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் நற்சான்றிதழ் வழங்கும் வகையில் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் சுமந்திரன் எம்.பி., இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு விளக்கமளிக்கையில், நாட்டின் அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தக்க தருணம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் அரசியலமைப்பிலுள்ள விடயங்களை முழுமையாக அமுலாக்குவதற்கு முக்கியமாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தயார் என எம்முடன் நடத்திய பேச்சுக்களில் உறுதியளித்துள்ளனர் என்று அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்.

ஆனால், தென்னிலங்கைத் தலைவர்களின் உறுதிமொழிகளின் நம்பகத்தன்மையை தெரிந்து கொண்டிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், “காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுலாக்க அவர்கள் உடன்பட்டுள்ளார்களா ?” என்ற சந்தேகக் கேள்வியைச் சுமந்திரனிடம் எழுப்பியபோது, ஆம் அவற்றையும் உள்ளடக்கியே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தத் தயார் என உறுதியளித்துள்ளனர். ஆகவே, இதுவொரு நல்ல தருணம் என சுமந்திரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் இந்தியாவுக்கு 37 வருடங்களாக தண்ணீர் காட்டி வருவதுடன், ‘13’ தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு வழங்கிய உறுதி மொழியையோ, சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளையோ தமிழ் மக்களுக்கு ஒவ்வொரு தேர்தல் காலத்தின்போதும் வழங்கி வரும் வாக்குறுதிகளையோ இதுவரையில் நிறைவேற்றாத தென்னிலங்கை அரசியல் தலைவர்கள், ஜனாதிபதிகள், சுமந்திரனுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவார்கள் என நம்புவதற்கு ஜெய்சங்கர் ஒன்றும் சம்பந்தனும் அல்ல. தமிழ்மக்கள் ஒன்றும் சுமந்திரன் அணியுமல்ல.

ஸ்ரீதரன், சுமந்திரன் ஆகியோரின் முரண்பட்ட கருத்துக்களினால் “கண்ணைக் கட்டுதே” என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மனதிற்குள் புலம்பிக் கொண்டிருக்க, விட்டேனா பார் என்ற வகையில் ஒற்றையாட்சிக்குள் சிங்கள அரசு வழங்கும் எந்தத் தீர்வையும் நாம் ஏற்க மாட்டோம் என அடுத்த ஆப்பை இறக்கியுள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரான செல்வராசா கஜேந்திரன். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவினை தாம் எடுத்துள்ளதாகவும் கூறி ஜெய்சங்கருக்கே வில்லனாகவும் மாறினார்.

ஏனையவர்களான சி.வி.விக்னேஸ்வரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வடக்கு, வடக்கில் உள்ள தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பில் ஜெய்சங்கருக்கு தெளிவு படுத்தியதோடு, இவ்வாறான நிலைமையினால் தமிழர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கும் என்பதாலேயே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

ஆக மொத்தத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பு வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தாது அவருக்கு முன்பாகவும் தமது முரண்பாட்டு அரசியலை வெளிப்படுத்தி “தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் திருந்தாத ஜென்மங்கள்” என்ற மரபணுக்கோளாற்றை மீண்டும் உறுதிப்படுத்தி தாமும் குழம்பி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரையும் குழப்பி விட்டே வந்துள்ளனர். தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் இந்த சந்திப்பை வைத்து இந்தியா ஏதாவது முக்கிய காய் நகர்த்தலை அல்லது அரசியல் அழுத்தங்களை இலங்கைக்கோ, ஆட்சியாளர்களுக்கோ எதிராக எடுக்குமென யாரவது நினைத்தால் அது அடி முட்டாள்தனமானதாகவே இருக்கும்.

## கடிதங்கள்

### நன்னீர் மீனவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி-இரணைமடு குளத்தில் தடை செய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்த, சிலர் சட்டவிரோத தொழிலில் ஈட்டுப்பட்டு வருகின்றமையால் பெரும்பாலான ஏனைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி-இரணைமடு குளத்தில் சுமார் 50 மீனவர்கள் தடை செய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈட்டுப்பட்டு வருகின்றனர்.

நீரியியல் வள திணைக்களம் குறித்த தடை செய்யப்பட்ட தொழிலை மேற்கொள்ள வேண்டாம் என அறிவித்தும் அதனையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

எனவே, இது தொடர்பில் உரியத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– மு.தமிழ்ச்செல்வன்

# புது வசந்தம்



றோசில்டா அன்டன்

பெற்றோருக்கு விருப்பமில்லாத திருமணத்தைச் செய்த தமிழ் மூன்றே மாதத்தில் விபத்தொன்றில் கணவனை இழந்து விதவையானாள்.

அந்த மன விரக்தியில் தமிழ் தன்னையே தனிமைப்படுத்திக் கொண்டாள். அவளுக்கு அப்பா தான் உயிர். நல்ல நண்பனும் கூட, அவரையே வேதனைப்படுத்தி வீட்டை விட்டு கஜனுடன் போகுமளவிற்கு காதல் அவள் கண்களை மறைத்திருந்தது. ஆனால், அவள் விரும்பிய வாழ்க்கையுடன் மகிழ்ச்சியாக வாழ கொடுத்து வைக்காதவள். மீண்டும் பெற்றோரிடம் வரத் தயக்கம்.

எப்படியோ 'தானாடாவிட்டாலும் தன் தசையாடும் என்பார்களே' அவள் தந்தை ராசா மகளின் நிலையை அறிந்து மிகவும் வேதனைக்குள்ளானார். மகளை தன்னுடன் அழைத்து வர முடிவு செய்தார். "தமிழ் வாம்மா வீட்டை போவம்" கண்கள் கலங்கிய வண்டம் மகளின் முன்னே அத்தனை தெய்வங்களும் ஒன்றாய் வந்தது போல அப்பா வந்து நின்றார்.

அப்பா அழைத்ததுமே ஒவென அழுது கொண்டே அப்பாவின் காலில் விழுந்து இரு கால்களையும் அணைத்து கதறினாள்.

பிள்ளைகள் என்ன தவறு செய்தாலும் பெற்றோர் பிள்ளைகளை மன்னிப்பார்கள். அப்பா வந்து அழைத்ததுமே தமிழ் உடனே தன் உடமைகளை எடுத்துக்கொண்டு அப்பாவுடன் ஆசையாக வீட்டிற்கு புறப்பட்டாள்.

தாய் திலகத்திற்கு மகளின் வருகை மகிழ்ச்சியை தந்தாலும், ஊராரின் விசப் பேச்சுக்களை நினைத்தும் விதவையாக வந்திருக்கும் மகளை ஏதும் கூறிவிடுவார்களோ என்கின்ற பயம் வேறு.

அப்பா, அம்மாவுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தாலும் கஜனுடன் இரண்டு மாதம் வாழ்ந்த வாழ்க்கையை பற்றி அவ்வப்போது நினைத்து கலங்குவாள் தமிழ்.

காலங்கள் மெல்ல உருண்டோடியது. "ஐந்து மாதமாக வீட்டிலயே அடைப்பட்டு கிடக்கிறாய் வா தமிழ் கோயிலுக்கு போய் வருவம்" அம்மா கட்டாயப்படுத்தி தமிழை கடற்கரையை அண்டி இருக்கும் பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.

கோயில் மணி அடிக்கும் சத்தம் வந்த திசையை பார்த்துக்கொண்டிருக்கும் போது, அங்கு ஒருத்தர் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

ஏதோ மன பிரம்மை என்றே நினைத்துக் கொண்டாள். மீண்டும் அதே இளைஞன் அவள் அருகில் வந்து "இந்தாங்க பிரசாதம்" என்று குங்குமம், தீருநீரை நீட்ட அதிர்ந்தவளாக அம்மாவின் கண்களை நோக்கினாள். திலகம் புன்னகைத்தவளாக "இங்க தாங்க தம்பி" என்று கைநீட்டி பெற்றுக்கொண்டார். திலகத்திற்கு அந்த இளைஞனை எங்கயோ கண்ட நினைவு. ஆனால், உடனே நினைவிற்கு வரவில்லை. அவன் தனது நண்பர்களுடன் கோயிலுக்கு வந்தப்படியால் அவ்விடத்தில் நீண்ட நேரம் நிற்கவில்லை.

தமிழுக்கு ஒரே படப்படப்பாய் இருந்தது. அந்த இளைஞன் அவ்விடத்தை விட்டு அகன்றதும் மூச்சு மீண்டும் வந்தது போன்ற உணர்வு.

வீட்டில் யாருடனும் பெரிதாக கதைப்பதில்லை. கல கல என்று வீட்டில் இருந்த மகள், இப்போ தன்னை தனிமைப்படுத்தி கொண்டதை நினைத்து அப்பா கலங்காத நாட்களே இல்லை.

"திலகம் நாங்க வெளியூர் எங்கேயாவது போய் வருவோமா? தமிழ் சோர்வாகவே இருக்கிறாள். அவளை பார்க்கவே பாவமாக இருக்கின்றது"



என தொடங்கினார். "ஓம் அப்பா எங்கயாவது போய் வருவம் தமிழுக்கும் ஒரு மாறுதலாக இருக்கும்" அம்மாவும் அப்பாவும் பேசவதை தமிழ் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"வயதான பெறறோரை யோசிக்க வைக்கிறேன், வேதனைக்குள்ளாக்குகிறேனே" என்று தனக்குள் வேதனைப்பட்டுக் கொண்டவள். எழுந்து தோட்ட பக்கம் சென்றாள்.

மண்வெட்டியை எடுத்து வந்தவள், மண்ணை கொத்திக்கொண்டிருந்தாள். அப்பா அந்தப் பக்கம் வர என்ன என்பது போல் பாவனை செய்தாள்.

"தமிழ் நாளை யாழ்ப்பாணம் போய் வருவமா, எனக்கும் அலுவல் இருக்கு. அத்துடன், நீங்களும் வந்தால் நல்லது என்று நினைத்தேன்"

"ஓம் அப்பா போவோம்"

அவளும் தனது சூழ்நிலையை மாற்ற நினைத்தவளாய் அப்பாவின் முடிவிற்கு உடனே சம்மதம் சொன்னாள். யாழில் அப்பாவின் நெருங்கிய நண்பரின் வீட்டில் ஒரு கிழமை தங்குவதாக ஏற்பாடு. தென்னந்தோப்புகள், அதை அண்டிய படி கால்வாய், வயல் என அழகான இடமான யாழ். மாவட்டத்தின் அழகிய கிராமமான கல்வயலுக்கே பயணமானார்கள்.

அவர்களை வரவேற்க அப்பாவின் நண்பன் சிவமும் அவர்களின் குடும்பமும் காத்திருந்தார்கள். "வா ராசா உன்னை கண்டு எத்தனை வருசமாச்சு கலியாணம் பிள்ளைகள் என்றானதும் எம் நட்புக்கும் இடைவெளியனதே" இருவரும் ஒரே பாடசாலையில் படித்திருந்தாலும் தொழில் காரணமாக பிரிய வேண்டியதாய் போய்விட்டது.

காலங்கள் உருண்டோட, சிவத்தின் திருமணத்தின் போது சந்தித்துக்கொண்டார்கள். பின்பு நேரில் காணவில்லை என்றாலும் தொலைபேசித் தொடர்பு அவர்களிடைய இருந்தது.

களைப்பு தீர சிறிது நேரம் கதிரையில் அமர்ந்தவர்களை சிவத்தின் மனைவி தேநீர் கொண்டு வந்து கொடுத்த உபசரித்தார்.

சிவத்திற்கு மகன் ஒருத்தன் மட்டுமே. இருபத்தைந்து வயது. தந்தையின் வயல், தென்னந்தோப்பு, கடையை கவனிப்பவன் அவனே!

இரவு சாப்பாட்டுக்கு தேவையான ஆயத்தங்களை செய்த சிவத்தாரின் மனைவி அனைவரையும் சாப்பிட அழைத்தாள்.

அப்போது "மகன் கஜன் வந்துட்டிங்களா? குளிச்சுட்டு வாங்க. ராசா மாமா குடும்பம் வந்திருக்காங்க அவர்களுடன் சேர்ந்து சாப்பிடலாம்" அம்மாவின் அன்பான குரலுக்கு செவிசாய்த்தான்.

தமிழ் வியர்த்துப் போனாள்.. மீண்டும் படபடப்பு தொற்றிக் கொண்டது. "கஜன்.. கடவுளே மீண்டும் அதே பெயர்" வாழ்வில் எதை மறக்க வேண்டும் என்று நினைத்தாளோ விதி மீண்டும் கஜன் என்ற

> **"தமிழை கவனமாக கண்கலங்காமல் பார்த்துக்கொள்வேன் எனக்கு அவளை கட்டி தாங்க மாமா" ராசா கஜன் கூறியதைக் கேட்டதும் கண்கலங்கினார். சிவம் என்ன நினைப்பான் இந்த திருமணத்திற்கு ஓம் சொல்வானோ தெரியலயே" என்று தனக்குள் சங்கடப்பட்டார்.**

பெயரின் வடிவில். சிவம் கஜனை ராசாவின் குடும்பத்திற்கு அறிமுகப்படுத்தினார். ராசாவிற்கு கஜனை நேரத்துடனே அறிமுகம் இருந்தது. சிவம் தொலைபேசியில் கதைக்கும் போது அறிமுகப்படுத்தியும் உள்ளார்.

கஜனை ஓரக்கண்ணால் பார்த்தாள் தமிழ். "கடவுளே இவரா அன்று கோயிலில் சந்தித்தது பிரசாதம் நீட்டியவரல்லவா" .. அவரே தான்..

கஜன் சாப்பாட்டு மேசைக்கு வந்தான். திலகம் "தம்பி நீங்களா அன்று பிள்ளையார் கோயிலுக்கு வந்திங்க"

"ஓம் நண்பர்களுடன உங்கட ஊர் சுற்றி பார்க்க வந்தோம் ஆன்டி. ஆனால், நீங்க ராசா மாமாட மனைவி என்று எனக்குத் தெரியாது" என்றான் கஜன்.

தமிழை சிவம் அறிமுகப்படுத்தினார். துன்ப செய்தியும் கதைவாக்கில் வர தமிழ் கண்கலங்கிக் காணப்பட்டாள். கஜன் புரிந்துக்கொண்டவனாக கதையை வேறு திசையை நோக்கி நகர்த்தினான்.

இரவு பத்தைக் கடக்க ராசா குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட அறையில் ஒய்வெடுக்க சென்று விட்டார்கள். மறுநாள் காலை கஜன் வயலுக்கு புறப்பட ஆயத்தமான போது, சிவம் "கஜன் தமிழை எங்கட வயலுக்கு கூட்டி போய் காட்டு, அவட மனசும் ஆறுலாக இருக்கும்" என்றதும் "ஓம் அப்பா கூட்டி போறன், ராசா மாமாவையும் வர சொல்லுங்க" கஜன் அவர்களையும் கூட்டிக்கொண்டு வயலுக்கு போனான். ராசா, சிவத்தின் நட்பு பற்றி பலகதைகள் பேசிக் கொண்டே வந்தார்.


ஆனால், தமிழ் மட்டும் முக வாட்டமாகவே இருந்தாள். கஜனிடம் ராசா மகளின் வாழ்க்கையைப்பற்றி கூறி இருந்தார். "அவளை மீண்டும் பழைய தமிழாக பார்க்கனும் தம்பி" என்று கவலை தோய்ந்த முகத்துடன் ராசா கூறியதை பற்றி கஜனும் சிந்தித்தான்.

அவளுக்குள் உள்ள திறமைகள், ஆளுமைகள் என்ன என்பதனை கஜன் கண்டறிந்தான். அவள் பழையதை மறக்குமளவிற்கு அவளுக்கு துணையாக இருந்தான். அவள் வாழ்வில் மகிழ்ச்சி மீண்டும் துளிர ஆரம்பித்தது. ஆறு வருடங்கள் நல்ல நண்பர்களாக இருவரும் நட்பை பேணினார்கள். கஜன் தன்னை அறியாமலே தமிழை காதலிக்க தொடங்கினான்.

ஒருநாள் தமிழை நேரிலே பார்த்து தன் காதலை தெரிவிப்பது என ஊரிற்கு புறப்பட்டான். தமிழ் கஜனை கண்டதுமே அன்றலர்ந்த செந்தாமரை போல, மகிழ்ச்சியில் துள்ளி குதித்தாள். "கஜன் அப்பா அம்மா வரலயா" என்று தமிழ் கேட்டதும். இல்ல தமிழ் உங்களை பார்க்கனும் போல தோனிச்சு அது தான் உடனே பஸ் ஏறி வந்துட்டன்" என்றான்.

குளித்து முடித்து சாப்பிட்ட பின்னர், ராசா மாமாவிடம் தனது காதலை தெரிவித்தான். "தமிழை கவனமாக கண்கலங்காமல் பார்த்துக்கொள்வேன் எனக்கு அவளை கட்டி தாங்க மாமா" ராசா கஜன் கூறியதைக் கேட்டதும் கண்கலங்கினார். சிவம் என்ன நினைப்பான் இந்த திருமணத்திற்கு ஓம் சொல்வானோ தெரியலயே" என்று தனக்குள் சங்கடப்பட்டார். கஜன் ராசாவிடம் கலங்க வேண்டாம் அப்பாவிடம் சம்மதம் பெற்று வருவதாக கூறி விடைப்பெற்றான்.

பெற்றோரிடம் தனது காதலைப்பற்றி கூறினான். சிவம் ஆரம்பத்தில் தயங்கினாலும், நண்பனின் மகளுக்கு வாழ்க்கை ஒன்று அமைவதையிட்டு மகிழ்ந்தார். பெற்றோரின் சம்மதத்துடன் திருமணமும் இனிதே நிறைவேறியது.



# பாதையை மாற்றும் போதை

போதைப்பொருள், சமூகத்தை முற்றிலும் அழிக்கும் ஒரு கொலைகாரனைப் போன்றது. அனைத்து வகையான நோய்களுக்கும் முன்னோடியாக இருப்பது போதைப்பொருள் பயன்பாடு. போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கு உலக நாடுகள் நடவடிக்கை எடுப்பது மற்றும் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்ற நோக்கத்துடன், ஆண்டுதோறும் ஜூன் 26ஆம் திகதி 'சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத கடத்தலைத் தடுக்கும் தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது.


போதைப்பொருட்களைப் பயன்படுத்துதல், போதைப்பொருட்களைக் கடத்துதல், போதைப்பொருள் விற்பனை ஆகியவற்றை ஒழிக்கக் கடுமையான சட்டங்கள் மூலம் அனைத்து நாடுகளும் பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றன. ஆனாலும் இதன் பயன்பாடு அதிகரிக்கின்றதே தவிரக் குறையவில்லை. தினமும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் உலகில் ஆங்காங்கே நடக்கின்றன. புது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போதைப்பொருட்களைக் கும்பல் கடத்துகிறது.

போதைக்கு அடிமை ஹெரோய்ன், அபின் , கஞ்சா உள்ளிட்ட பலவகையான போதைப்பொருட்கள் உலகில் சட்டத்துக்குப் புறம்பாக விற்பனை செய்யப்படுகிறது. போதைப்பொருள் பயன்படுத்தி, அவர்களை மட்டுமல்லாமல், தங்களை




சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சீரழிக்கின்றனர். சிலர் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர். இன்றைய சூழலில் இளைஞர்கள் மட்டுமல்லாமல், பாடசாலை மாணவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாவது வருத்தமான விடயம். இம்மாதிரியான மாணவர்களுக்கு சரியான விழிப்புணர்வு வழங்கி அப்பழக்கத்தில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும்.

ஆண்... இனிய இல்லத்தின் தூண். குடும்பத்தை



வழிநடத்தும் 'ஆணிவேர்'. ஆணிவேர் நன்றாக இருக்கும் வரை, குடும்பமும் நன்றாக இருக்கும். மது, கஞ்சா, புகைப்பொருள்... என ஆண்களைச் சீரழித்து, அவர்தம் குடும்பங்களைச் சீர்குலைக்கும் விடயங்கள் சமுதாயத்தில் அதிகம். நல்ல வேலையை இழந்து, மனைவியிடம் மதிப்பிழந்து, பிள்ளையிடம் மரியாதை இழந்து, சமுதாயத்தில் பெயர் இழந்து, 'மனிதன்' என்ற தகுதியை மொத்தமாக இழக்கச் செய்துவிடுகிறது 'போதை'.

போதையின் பாதையில் சென்று, மறுவாழ்வின் மூலம் குடும்பத்துடன் சந்தோஷமாக இணைந்த ஆடவர்களின் அனுபவங்கள் நம் ஒவ்வொருவருக்கும் பாடம்.

மயக்க, தூக்க மருந்துகள், வலி நிவாரணிகள் அனைத்துமே போதை ஏற்படுத்தக் கூடியவை. மருந்துகள் அனைத்துமே நோயைக் குணப்படுத்தக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், அதை அளவு மீறிப் பயன்படுத்தி, போதை மயக்கத்திற்கு ஆட்படுகின்றனர். பெரியவர்கள் மட்டுமின்றி, பள்ளி மாணவர்கள் கூட இப்பழக்கத்திற்கு ஆளாகின்றனர்.

ஒயிட்னர், தின்னர், நகப்பாலீஷ், இருமல் மருந்து, மயக்க மருந்துகளை மாணவர்கள் பயன்படுத்துவது முதலில் தெரியாது. அதற்கு அடிமையாகும் போது, பதட்டம், சந்தேகம், காதில் யாரோ பேசுவது போன்ற தோற்றம், தனிமையை விரும்புவது போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

கையில் காசு இல்லாத போது, வீட்டில் பொருட்களைத் திருடுவர். இளம் குற்றவாளிகள் உருவாவதற்கு இதுவும் காரணம்.

போதை பழக்கத்தால் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலும், மனதும் பாதிக்கப்படும். முறையான, தொடர் சிகிச்சையின் மூலம் யாரையும் நல்வழிப்படுத்தலாம்,

## வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில்

# வெற்றி

அன்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் இலங்கைத் தாயை ஆபத்தான தொங்கு பாலத்தின் ஊடாக கொண்டு வர முடிந்ததாக தெரிவித்த ஜனாதிபதி, ஹுனுவட்டயே நாடகத்தில் வருவதைப் போன்று கடினமான நிலைமையில் குழந்தையைப் பாதுகாப்பதற்கு அஞ்சி எந்த ஆதரவையும் வழங்காத தரப்பினர், குழந்தை தொங்கு பாலத்தை கடக்கும் முன்பே குழந்தையின் உரிமையைக் கேட்டு போராடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடனை செலுத்த முடியாமல் வங்குரோத்தான நாடென்று முத்திரை குத்தப்பட்ட ஒரு நாடு இரண்டு வருடங்களில் இந்தளவு முன்னேற்றத்தைப் பெற முடிந்திருப்பது வெற்றி எனவும், அண்மைய வரலாற்றில் பொருளாதார படுகுழியில் விழுந்த உலகின் எந்த நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வாறான நிலையை அடைந்ததில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடு எதிர்நோக்கும் சவால்களை உண்மையாகப் புரிந்துகொண்டு அவற்றிற்கு நடைமுறை தீர்வுகளை வழங்கி, முடிவுகளைக் காட்டிய தன்னுடன் சேர்ந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வீர்களா? இல்லையேல் இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாத மற்றும் அதிகாரத்திற்காக இருட்டில் தடவிக் கொண்டிருக்கும் குழுக்களுடன் இணைவதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தவறான பாதையில் செல்வதால் ஏற்படும் ஆபத்துக்களை அனைவரும் அறிந்துவைத்துள்ளதால், அது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பதற்கு மக்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். மக்கள் எடுக்கும் தீர்மானம் ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது என்றும் அது நாடு மற்றும் எதிர்கால குழந்தைகளின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வங்குரோத்து அடைந்து நாட்டின் பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்பதற்கு தனது கட்சிக்கு பாராளுமன்ற அதிகாரம் இருக்கவில்லை எனவும் தன்னால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகளோ தான் நியமித்த அமைச்சரவையோ இருக்கவில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவை எதுவும் இன்றி உலகையே ஆச்சரியப்படுத்தும் விதத்தில் இரண்டு வருடங்களில் நிலையான நாட்டை கட்டியெழுப்ப தன்னால் முடிந்ததாகவும் குறிப்பிட்டார்.

### ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை வருமாறு :

நமது நாட்டின் அண்மைய வரலாற்றில் இன்று மிக முக்கியமான நாள். இந்நாள் ஒரு தனித்துவமான மைல்கல்.

கடந்த காலத்தில் நாம் பாடுபட்ட பணிகளுக்கான நல்ல பலன்கள் தற்போது நமது நாட்டுக்குக் கிடைத்துள்ளன.

இன்று முற்பகல் பெரிஸ் நகரில் இலங்கையின் உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்யப்பட்டு, கடன் வழங்குநர்களுடன் இறுதி இணக்கப்பாட்டை எட்ட முடிந்தது.

அதேபோல் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இன்று நாம் பீஜிங் நகரில் இறுதி இணக்கப்பாட்டினை எட்டினோம். அதற்கு அமைவான உரிய செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டை உண்மையிலேயே நேசிப்பவர்களுக்கு இது ஒரு நற்செய்தியாகும். SRI LANKA WON!

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இவ்வகையான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். விரிவாக பேச்சுவார்த்தை நடத்தினோம். கடந்த காலத்தில் நாம் பெற்ற பொருளாதார வெற்றிகள் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் எமக்குப் பெரும் பலமாக இருந்தது.

இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய, எமது கடன் வழங்குநர்களான சீனா மற்றும் சீன எக்ஸிம் வங்கி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவில் இணைத்தலைமை வகிக்கும் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களும், பெரிஸ் கழகத்தின் செயலகமும் எமக்கு வழங்கிய ஆதரவுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், எமக்கு ஆலோசனை வழங்கிய லஸார்ட்(Lazard) மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் (Clifford Chance) அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஒப்பந்தங்களின் மூலம், வெளிநாடுகளில் உள்ள அனைத்து இருதரப்பு கடன் தவணைகளையும் 2028 ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்க முடியும். அதன்பிறகு, சலுகை நிபந்தனைகள் அடிப்படையில் அனைத்து கடன்களையும் செலுத்த 2043 வரை நீண்டகால அவகாசம் கிடைக்கும்.

இன்று நாம் எட்டியுள்ள இணக்கப்பாடுகளால், நமது பொருளாதாரத்திற்கு சுவாசிக்க அவகாசம் கிடைக்கிறது. 2022ஆம்ஆண்டில்,மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2வீதத்தினை, வெளிநாட்டுக் கடனை செலுத்துவதற்கு செலவிட வேண்டியிருந்தது.2027 முதல் 2032 வரையான இடைப்பட்ட காலத்தில் கடன் செலுத்துவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5மூ இற்கும் குறைவான தொகையையே ஒதுக்குவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.

2022 இல் அரசாங்கத்தின் வருடாந்த நிதித் தேவை, மொத்த தேசிய உற்பத்தியில் 34.6 சத வீதமாகும் . இந்த இணக்கப்பாடுகள் காரணமாக 2027-2032 வரையான காலப்பகுதியில் அந்த நிதித் தேவை 13 சதவீதத்தை விடக் குறையும்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இலங்கை கடன் செலுத்த முடியாத நாடு என்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் எங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திவிட்டன. வங்குரோத்து அடைந்த நாட்டுடன் நிதி உறவுகளைப் பேணுவதற்கு எந்தவொரு நாடும் முன்வராது, கடன்களை வழங்காது. குறைந்தபட்சம் கடன் பத்திரங்களைக்கூட ஏற்றுக்கொள்ளாது.

இந்தப் பின்னணியில் வெளிநாட்டுக் கடன் உதவியோடு நம் நாட்டில் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. அந்த நாடுகள், தங்கள் திட்ட அலுவலகங்களை மூடிவிட்டு தத்தமது நாடுகளுக்குச் சென்றன. அபிவிருத்திப் பணிகள் முற்றிலும் முடங்கின.

ஆனால் இப்போது கடன் மறுசீரமைப்புப் பணியின் முக்கியமான கட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளதால், வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி முன்னெடுத்த அனைத்து திட்டங்களையும் மீண்டும் தொடங்க அந்தந்த நாடுகளுக்கு சட்டபூர்வ வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி, இலகு ரயில் பாதை, அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட பல திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அது மாத்திரமன்றி பல புதிய அபிவிருத்தித் திட்டங்களை எமக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே இன்று நாம் இணக்கப்பாட்டிற்கு வந்த இந்த இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். இந்த உடன்படிக்கைகளை பிரதமர் அவர்கள், ஜூலை 2ஆம் திகதி நடைபெறும் விசேட பாராளுமன்ற அமர்வில் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பார். பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டை நேசிக்கும் அனைத்துத் தரப்பினரையும் அந்த ஒப்பந்தங்களை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இதுவரை எளிதான பயணத்தை கடந்துவரவில்லை. கடந்த காலங்களில் நாம் மிகக் கடினமான, கஷ்டமான பாதையைக் கடந்துவந்தோம். இந்தப் பணிக்காக நமது அமைச்சர்களும், அதிகாரிகளும் கடுமையாக உழைத்தனர். நமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பொறுமையுடன் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். நாங்கள் அனைவரும் வெவ்வேறு சிரமங்களையும், கஷ்டங்களையும் எதிர்கொண்டோம். இன்னமும் எதிர்கொள்கின்றோம்.

இந்த முன்னேற்றத்தை சீர்குலைக்க சிலர் முயன்றனர், இன்னும் முயல்கின்றனர். ஆனால் அவர்களால் இந்தப் பயணத்தை நிறுத்த முடியவில்லை. இவர்கள் எதிர்காலத்தில் ஒருநாள், நாட்டைக் காட்டிக் கொடுத்தமைக்காக, தங்களின் பிள்ளைகளின் முன்னால் வெட்கப்பட நேரிடும்.

தற்போதைய கஸ்டங்களை படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாம். வேலை நிறுத்தங்களாலும், அச்சுறுத்தல்களாலும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம், எங்களுக்கு தீர்வுகளும், நிவாரணங்களும் கிடைக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாங்கள் மிகவும் கடினமான பாதையில் செல்ல வேண்டியிருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். இந்தப் பிரச்சினைகளை ஒரு வாரத்தில், இரண்டு, மூன்று, நான்கு மாதங்களில் அல்லது ஒரு வருடத்தில் தீர்க்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

'ஹுனுவட்டயே' நாடகத்தை மேற்கோள்காட்டி, அடிவாரம் தெரியாத, பயங்கரமான பாதாளத்தின் மேலாக அமைக்கப்பட்ட தொங்கு பாலத்தை நாம் கடக்க நேரிடும் என்பதை வலியுறுத்தினேன்.

அப்போது நம் நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் இருந்தது. அதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற பலர் முன்வரத் தயங்கினர், பயந்தனர். 'செய்யாத சிகிச்சைக்கு சிறு-தேன் ஔடதம் தேடுவதைப் போல' ஒவ்வொரு காரணங்களைக் கூறி தப்பிக் கொள்ள முயன்றனர்.முழு ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்தால் நாட்டைப் பொறுப்பேற்பதாக ஒரு தரப்பு கூறியது. அமைச்சரவைக்கு தங்களுடைய ஆட்களை நியமிக்க அனுமதித்தால் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக மற்றொரு குழுவினர் தெரிவித்தனர். இன்னும் சிலர் ஜனாதிபதி பதவியை வழங்கினால் ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

ஆனால் எந்த நிபந்தனையும் இல்லாமல் இந்த சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். பொருளாதாரப் படுகுழியில் இருந்து நம் நாட்டையும், நம் நாட்டு மக்களையும் காப்பாற்றும் வலிமை எனக்கு இருந்தது. என்னிடம் வேலைத்திட்டம் இருந்தது.

இதுபோன்ற சூழ்நிலைகளில் இருந்து நாடுகள் வெளிவருவதற்கான வழிகளைப் பற்றிய புரிதலும் அனுபவமும் எனக்கு இருந்தது. திட்டமிட்ட கொள்கைகள் மற்றும் அர்ப்பணிப்புடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதற்காக சர்வதேச ஆதரவைப் பெற முடியும் என்பதையும் அறிந்திருந்தேன்.

அவைதான் என்னிடம் இருந்தன. எனக்கென்று எம்.பி.க்கள் இருக்கவில்லை. எனக்கென்று ஒரு அமைச்சரவை இருக்கவில்லை. எனக்கென்று ஒரு அரசாங்கம் இருக்கவில்லை. ஆனால் நான் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

"பெருமை பேசுவதை விட்டுவிட்டு செயலில் இறங்குவதே ஒரு பணியை ஆரம்பிப்பதற்கான சரியான வழி!" என்று உலகப் புகழ்பெற்ற படைப்பாளி வால்ட் டிஸ்னி சொன்ன கூற்று நினைவுக்கு வந்தது. பயமின்றி செயலில் இறங்கினேன்.

2022 ஆகஸ்ட் 3 ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டத்தொடரின் ஆரம்ப உரையின்போது, வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பின்பற்ற வேண்டிய நான்கு அம்சக் கொள்கைகளை நான் நாட்டுக்கு முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,
2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுனர்களான டுயணயசன மற்றும் ஊடைகைகழசன ஊhயஈஉந ஆகியோருடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,
3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,
4. இத்திட்டத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

ஆகிய நான்கு அம்சக் கொள்கைகளை அன்று முன்வைத்தேன்.

அன்று நான் குறிப்பிட்ட வேலைத்திட்டம் குறித்தும், அதை எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றிய அனைத்துத் தகவல்களையும் அவ்வப்போது பாராளுமன்றத்தில் முன்வைத்தேன். இதை நாங்கள் இரகசியமாகச் செய்யவில்லை. அனைத்தும் வெளிப்படைத் தன்மையுடன் செய்யப்பட்டன.

நான்கு அம்சக் கொள்கைகளில் முதல் மூன்று விடயங்களும் இப்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நமது வேலைத்திட்டமும் நாம் கடந்து வந்த பாதையும் சரியானவை என்பதை இது நிரூபிக்கிறது.

நமது பொருளாதாரம் வீழ்ந்துள்ள படுகுழி தொடர்பில் நாம் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தோம். அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய சரியான தீர்வுகளை நாங்கள் அறிந்திருந்தோம். எங்களுடைய தொலைநோக்குப் பார்வை, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு காரணமாக இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. எனவே, இந்த வழியைப் பின்பற்றினால், நான்காவது கட்டமான 2048 இற்குள் அபிவிருத்தியடைந்த நாடாக மாற முடியும் என்பது இப்போது தெளிவாகிறது.

2022 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் அதல பாதாளத்தில் இருந்த ஒரு நாட்டின் தற்போதைய நிலை என்ன?

தொடர்ந்து 6 காலாண்டுகளாக சுருங்கிச் சென்ற நமது பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து வளரத் தொடங்கியது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மீண்டு வர வழியின்றி, வற்றிப் போயிருந்த எமது வெளிநாட்டு கையிருப்பு தற்போது 5,500 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

ரூபாய் வலுப்பெற்றுள்ளது. வங்கி வட்டி விகிதம் குறைந்துள்ளது.

2022 செப்டம்பரில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 9 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதன்மை கணக்கு இருப்பை உபரியாக மாற்றக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதேபோல், கடந்த ஆண்டு நாட்டின் வெளிநாட்டுக் கணக்குக் கையிருப்பில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. 1977 இற்குப் பின்னர் உபரியை ஏற்படுத்தியது இதுவே முதல் முறையாகும்.

சிறந்த பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்காக நாம் இந்த இலக்குகளை எட்டியிருக்கிறோம். எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அதனால், நாம் இப்போது மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். அதேநேரம் நாம் இதுவரை கடந்து வந்த பாதை சரியானது என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தை பாராளுமன்றத்தில் அன்று சமர்ப்பித்தபோது, நாட்டைப் பற்றி சிந்தித்து இந்த வேலைத் திட்டங்களுடன் இணைந்துகொள்ளுமாறு இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அழைப்பு விடுத்தேன். சில அரசியல் கட்சிகள் அந்த அழைப்பை ஏற்று இன்று என்னுடன் இணைந்து இந்தப் பயணத்திற்கு ஆதரவளித்து வருகின்றன. ஆனால் சில அரசியல் கட்சிகள் இன்றும் விமர்சித்து வருகின்றன.

இந்த விமர்சனங்கள் பற்றியும் கூற விரும்புகிறேன்.

கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்தபோது சர்வதேச நாணய நிதியம் இல்லாமல் தீர்வு கிட்டாது என்று சொன்னவர்கள் இப்போது சர்வதேச நாணய நிதியம் தேவையில்லை என்கின்றனர். மக்கள் கஷ்டப்படும்போது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பயனில்லை என்று கூறிய தரப்பினர், அவர்கள் ஆட்சிக்கு வந்தால் பால் தேநீருக்கு பதிலாக வெறும் தேநீரை மட்டும் குடிக்க வேண்டியிருக்கும் என்று கூறுகின்றனர்.

சிலர் பிரசித்தமடைய அரசியல் செய்கின்றனர். இல்லையெனில், பாடசாலை அரசியலை செய்கிறார்கள். அவர்களின் அரசியல், பொருளாதார, ஆட்சி நிர்வாக அறிவு முன்பள்ளிக் கல்விக்கு மேலாக வளரவில்லை.

எவ்வாறாயினும், இந்த பிரச்சினை உக்கிரமடைந்த தருணத்திலேயே அதன் ஆழத்தை நான் உணர்ந்துகொண்டேன். தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் நான் இந்த நெருக்கடி குறித்து எடுத்துக்கூறினேன். தீர்வுகளையும் வலியுறுத்தினேன். சிலருக்கு இன்னும் அதன் பாரதூரம் புரியாமல் இருக்கிறது.

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர், நாட்டைக் கட்டியெழுப்ப பல நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அவை அனைத்தும் சரியானவை என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு இரு வருடங்கள் தேவைப்பட்டன. நான் இப்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சரியானவை என்பதை புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு இன்னும் சில வருடங்கள் தேவைப்படும்.

சரியானது எது என்பது புரியும் வரையில் அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதை மட்டுமே செய்வார்கள். வெட்டிப் பேச்சு பேசுவோர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர். வீண் பேச்சு பேசுவோரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர்.

அது பற்றியும் சற்றுப் பேச விருப்புகிறேன்.

நமது நாடு ஐஎம்எப்(IMF)ஆதரவைப் பெற்றுக்கொண்ட முதலாவது முறை இதுவல்ல. இதற்கு முன்னதாக 16 தடவை ஐஎம்எப்(IMF) ஆதரவு பெறப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு முறையும் இலங்கை தோல்வியடைந்தது. ஏன் அவ்வாறு நடந்தது? நாம் நிபந்தனைகளை மீறினோம். நாங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நிதி ஒழுக்கத்தைப் பேணவில்லை.

ஐஎம்எப்(IMF) வேலைத் திட்டத்தில் நாம் வெற்றி பெறுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். முன்பு ஐஎம்எப்(IMF) இடம் உதவி கோரிய 16 தடவையும் நாம் வங்குரோத்து அடைந்த நாடாக இருக்கவில்லை. ஆனால் வங்குரோத்து நாடாக உதவி கோரி, அந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு தலைமைத்துவம் வழங்கியதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அது இத்தோடு முடிந்துவிடாது. இது எமது பயணத்தில் ஒரு மைல்கல் மட்டுமே. இங்கிருந்து நாம் புதிய ஆரம்பத்தைப் பெற வேண்டும். தற்போது எங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். இவற்றை நாம் பயன்படுத்தி பொருளாரத்தை முன்னேற்ற வேண்டும். முழுமையான வெற்றியைப் பெற வேண்டும். நாம் முழுமையான வெற்றியைப் பெற்றால் நம் நாடு மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. அதற்காகவே நான் பாடுபடுகிறேன்.

ஐஎம்எப்(IMF) செல்ல அவசியமில்லாத, வலுவான வினைத்திறனான வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தை நாட்டில் கட்டியெழுப்பவே நான் பாடுபடுகிறேன். அதற்காக நாம் உழைக்கிறோம்.

நானும், எமது அமைச்சரவையும், நமது அரசாங்கமும் அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கிறோம். உழைப்பது மட்டுமன்றி அதற்கான பலன்களையும் காட்டுகிறோம்.

எங்களை விமர்சிக்கும் சில குழுக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர ஆசைப்படுவோர் இப்போதே ஜனாதிபதியையும் தெரிவு செய்துவிட்டனர். அவர்களில் சிலர், ஆட்சிக்கு வந்தப் பின்னர் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் ஆழமாக ஆலோசனை நடத்துகிறார்கள்.

சிலர் இப்போதே அமைச்சுக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். அவ்வாறு கனவு காணும் தரப்பினர், அவர்களின் மனைவியருக்கு அந்த அமைச்சுப் பதவிகளை வழங்குவது குறித்தும் சிந்திக்கிறார்கள்.

இந்தக் கனவு அமைச்சர்கள் இன்றைய எனது உரையை பற்றி நாட்டு மக்களிடம் எத்தனை பொய்களை சொல்லியுள்ளார்கள். ஊடக சந்திப்புக்களை நடத்தி பொய் சொன்னார்கள். அவை அனைத்துமே பொய் என்பது நாட்டு மக்களுக்கு இப்போது தெரியவந்திருக்கும்.

நாட்டுக்கு எவ்வாறான வெற்றி கிட்டினாலும், ஏன் அவர்கள் இன்னும் இதனை வன்மமாகப் பார்க்கிறார்கள்? நாட்டிற்கு கிடைக்கும் நற்செய்தியை எதிர்மறையாக பார்ப்பது ஏன்? எல்லாவற்றிலும் அரசியல் ஆதாயம் பெற ஏன் முயற்சிக்கிறார்கள்? அதிகாரத்தைப் பெறுவதற்காக ஏன் நாட்டுக்கு துரோகம் செய்கின்றனர்? இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் செய்வது ஏன்? அதற்கு இதுதான் காரணம்.

ஜனாதிபதி பதவிக்காக கடுமையாகப் போராடுகிறார்கள். நாம் நாட்டுக்காக போராடுகிறோம். அவர்களோ தங்களுக்குக் கிடைக்கும் பதவிகள், பட்டங்கள் பற்றிக் கனவு காண்கிறார்கள். ஆனால் நாம் நாட்டின் வளர்ச்சி பற்றி கனவு காண்கிறோம்.

அவர்கள் அமைச்சுக்களைப் பகிர்ந்துகொள்ள திட்டமிடுகிறார்கள். நாம் நாட்டை கட்டியெழுப்ப திட்டங்களை வகுக்கிறோம். அதிகாரத்தைக் கோரி இலங்கையைச் சுற்றி வருகிறார்கள். பாடசாலைகளுக்குச் சென்றும் அதிகாரத்தை கேட்கிறார்கள். உலகம் முழுவதும் பறந்து நாட்டின் அதிகாரத்தைக் கேட்கிறார்கள். அதிகாரத்துக்காக அல்லும் பகலும் ஓடித் திரிகின்றனர்.

ஆனால் நாம் நாட்டுக்காக இரவு பகல் பாராமல் உழைக்கிறோம். நாடு முழுதுமாகச் சென்று மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் திட்டங்களை ஆரம்பிக்கிறோம். நான் உலகம் முழுவதும் சென்று நமது நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச ஆதரவைப் பெற்று வருகிறேன்.

இத்தகைய பின்னணியில் நான் உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையைப் புரிந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு, அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் சரியான பாதையில் சென்று உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை மேம்படுத்துவீர்களா? அல்லது பயணத்தை மாற்ற வேண்டுமா?

தவறான பாதைக்குத் திரும்பினால் அல்லது தவறான பாதையில் பயணித்தால் ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். எனவே சரியான முடிவை எடுங்கள். அந்த முடிவை எடுக்க உங்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் உள்ளது. உங்கள் முடிவு ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது. நாட்டின் எதிர்காலத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் மட்டுமன்றி அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீட்க எனது கட்சிக்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் இருக்கவில்லை. நான் நியமித்த அரசாங்க அதிகாரிகளும் இருக்கவில்லை. அமைச்சர்களும் இருக்கவில்லை. ஆனால் அவை எதுவுமேயில்லாமல், உலகையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் இரண்டு வருட காலத்தில் நாட்டை சுமூகமான நிலைமைக்கு கட்டியெழுப்ப என்னால் முடிந்தது. அதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு வீதிகளில் எவற்றை கண்டோம்? இன்று எதனைக் காண்கிறோம். ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து இலங்கை அன்னையை மீட்டுத் தருவதாக அன்று நான் வாக்குறுதி அளித்தேன். குழந்தையைப் பத்திரமாக மீட்டு வந்திருக்கிறேன். இப்போது என்ன நடந்தது? "ஹுனுவடயே" நாடகத்தில் வருவது போல், குழந்தையைக் காக்க எந்த ஆதரவும் தராத குழுக்கள் தற்போது குழந்தையின் உரிமையைப் பெறப் போராடுகின்றனர். தொங்கு பாலத்தைக் கடக்கும் முன் குழந்தையை சொந்தமாக்க முயற்சிக்கிறார்கள். குழந்தையை இரு பக்கமாக அன்றி அனைத்துப் பக்கங்களிலும் பிடித்து இழுக்கின்றனர்.

நாம் அறிந்த 'ஹுனுவடயே' நாடகத்தின் நிறைவில், குழந்தையின் உரிமை உண்மையான தாய்ப்பாசமுள்ள அன்னைக்கு கிடைக்கிறது.

"தகுதியானவருக்கு தகுதியானது கிடைக்க வேண்டும்.குதிரை சரியான வண்டியோட்டியிடம் கொடுக்கப்பட வேண்டும்" என்று நாடகத்தின் கதாசிரியர் கூறுகிறார்.

அந்தக் கதையில் வரும் நீதிபதி அஸடக்கைப் போன்று நீங்களும் சரியான முடிவை எடுக்க வேண்டும். அப்போது தகுயானவருக்கு தகுதியானது கிடைக்கும். நமது நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிட்டட்டும் என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

# ட்ரம்ப் - பைடன் நேருக்கு நேர் விவாதம்

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

இந்த தேர்தலின் முக்கிய அம்சமாக, வேட்பாளர்கள் பல்வேறு கட்டங்களில் நேருக்கு நேர் விவாதிப்பது வழக்கம்.

இந்த நிலையில், ஜோர்ஜியா தலைநகர் அட்லாண்டாவில் வியாழக்கிழமை (26) இரவு 9 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வு ஒன்றில் ஜோ பைடனும், டொனால்ட் ட்ரம்பும் நேருக்கு நேர் சந்தித்து விவாதிக்க உள்ளனர்.

இதன்போது, தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பட்டியலிட்டு வாக்காளர்களிடம் ஆதரவு கேட்பார்கள். தங்களின் செயல்பாடுகள் எப்படி இருக்கும்? என்பது குறித்தும் விளக்கம் அளிப்பார்கள். குறிப்பாக, குடியேற்றம், பொருளாதாரம் மற்றும் பணவீக்கம் தொடர்பான விவகாரங்கள், ரஷ்யா, உக்ரைன் போர் மற்றும் காசாவில் இஸ்ரேலின் போர் பற்றிய கேள்விகள், சீன விவகாரம் போன்றவை விவாதத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த விவாதம் சுமார் 90 நிமிடம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவாதத்தில் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தக்கூடாது உள்ளிட்ட கடுமையான விதிமுறைகள் உள்ளன. பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை என கூறப்படுகின்றது.

இரண்டு முன்னணி வேட்பாளர்கள், நாட்டிற்கான தங்களின் செயல்திட்டங்கள் பற்றிய தெளிவான பார்வையை வாக்காளர்களுக்கு வழங்க உள்ளதால், இந்த விவாதம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ரஷ்யா

சர்வதேச பிடியாணைக்குள்

## ரஷ்ய அதிகாரிகள்

ரஷ்யாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு மற்றும் இராணுவத் தளபதி வலேரி ஜெராசிமோவ் ஆகியோருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்த கைதுக்கான பிடியாணையை பிறப்பித்துள்ளது.

உக்ரேனியப் போரின் போது ரஷ்யர்கள் உக்ரேனிய மக்களுக்கு எதிராக போர்க்குற்றங்களை இழைத்ததாக செர்ஜி ஷோய்கு மற்றும் வலேரி ஜெராசிமோவ் மீதான குற்றச்சாட்டுகளை கருத்தில் கொண்டே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை கைது செய்ய பிடியாணை பிறப்பித்துள்ளது. விளாடிமிர் புட்டின் தலைமையில் போர் நடந்து கொண்டிருப்பதே அதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



தென் கொரியா

குப்பை பலூனால்

## தென்கொரிய விமான சேவை பாதிப்பு

பறந்து வந்த வடகொரியாவின் குப்பை பலூன்கள் தென் கொரிய விமான நிலையத்தில் விழுந்ததனால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடகொரியா - தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது.

வடகொரியா, சமீப காலமாக பலூன்கள் மூலம் தென் கொரியாவிற்குள் குப்பைகளை வீசுகிறது.

இந்நிலையில், வட கொரியாவில் இருந்து புதன்கிழமை (26) மீண்டும் குப்பை பலூன்கள் தென் கொரியா நோக்கி அனுப்பப்பட்டன. இந்த பலூன்களில் ஒரு பலூன், தென் கொரியாவின் இன்சியான் சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் முனையம் அருகே விமானங்கள் நிறுத்தப்படும் பகுதியில் விழுந்தது. மேலும் பல பலூன்கள் விமான நிலைய சுற்றுச்சுவர் அருகே பறந்துகொண்டிருந்தன. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையம் மூடப்பட்டது. அத்துடன், ஓடுபாதையில் எந்த விமானமும் தரையிறக்க அனுமதிக்கப்படவில்லை. எந்த விமானமும் புறப்பட்டுச் செல்லவில்லை. மூன்று மணி நேரத்திற்கு பிறகு நிலைமை சரியானதும், விமான சேவை தொடங்கியதாக தென்கொரிய தகவல்கள் கூறுகின்றன.

சென்னை

ராகுல் காந்திக்கு

## முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக தெரிவாகியுள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர், ராகுல் காந்திக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவராக காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவு செய்யப்பட்டதாக கடந்த செவ்வாய்கிழமை அக்கட்சி தலைமை அறிவித்தது.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "எனது அன்பு சகோதரர் ராகுல் காந்தியை, புதிய பொறுப்பிற்கு இந்தியா வரவேற்கிறது. அவரது குரல் மக்களவையில் தொடர்ந்து வலிமையாக முழங்கட்டும்" என பதிவிட்டுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் நேரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்றாவது நபர் ராகுல் காந்தி ஆவார்.




அவருக்கு முன்னர், சோனியா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோர் இந்த பதவியை வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரியானா

ஆணவக் கொலைக்கு ஆளாகி

## நால்வர் பலி



ஹரியானாவில் ஒரே மாதத்தில் நான்கு பேர், ஆணவக் கொலைக்கு ஆளாகி பலியாகியுள்ளனர்.


ஹரியானா, கைதல் பகுதியில் உள்ள கியோரக் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதான குஜ்ஜர் இனப் பெண் கோமல் ராணியும், அனில் என்னும் பட்டியலின இளைஞரும் வீட்டைவிட்டு வெளியேறி பதிவுத் திருமணம் செய்து கொண்டதால் ஆத்திரமடைந்த பெண்ணின் தம்பி, அவரை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளார். இதில் கோமல் சம்பவ இடத்திியே உயிரிழந்தார். சத்தம் கேட்டு தடுக்க வந்த அனிலின் தாய் மற்றும் சகோதரியின் மீதும் அவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். இதில் படுகாயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

அதேபோல், ஹரியானாவில் 27 வயது மகள் தனது விருப்பத்திற்கு மாறாக ஓர் இளைஞனைக் காதலித்து வந்ததால் அவரைக் கொலை செய்திருந்தார். அதேசமயம், ஹரியானா-ஹிசார் பகுதியில் பெற்றோர் விருப்பத்தை மீறி காதலித்துத் திருமணம் செய்து கொண்ட இருவரும் ஒரே சமயத்தில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

புது டெல்லி

காதலன் முகத்தை சிதைத்து

## பழிவாங்கினார் காதலி



இளம்பெண் ஒருவர் தன்னைக் காதலித்து ஏமாற்றிய இளைஞனின் முகத்தை சிதைத்து பழிவாங்கிய சம்பவம் ஒன்று புது டெல்லியின் புறநகர் பகுதியான நிகல் விகாரில் நடைபெற்றுள்ளது.

ஓம்கார் (24) என்னும் இளைஞனும், 30 வயதுடைய ரூபவ் என்னும் பெண்ணும் 3 ஆண்டுகள் காதலித்து வந்த நிலையில், சில நாட்களுக்கு முன் ஓம்காருக்கு வேறொரு பெண்ணுடன் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. ஓம்காரிடம் இதுகுறித்து கேட்டுள்ளார். அதற்கு வயதை காரணம் காட்டி காதலை அவர் நிராகரித்துள்ளார்.

இதனால் மனமுடைந்த அந்தப் பெண், கூலிப்படையை தயார் செய்து, ஓம்கார் முகத்தில் திரவத்தை (ஆசிட்) ஊற்றி சிதைக்க திட்டமிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 19ஆம் திகதி வேலை முடிந்து வீடு திரும்பிகொண்டிருந்த ஓம்காரை கூலிப்படையினர் வழிமறித்து முகத்தில் திரவத்தை ஊற்ற முயன்றுள்ளனர். ஆனால் அது முடியாமல் போனதால், ரூபவ் தன் கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து அவரின் முகத்தில் சரமாரியாக கிழித்து சிதைத்துள்ளார்.

யூரோ:

# ஒஸ்திரியாவிடம் தோற்ற நெதர்லாந்து



ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரில், செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற ஒஸ்திரியாவுடனான குழு டி போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து தோற்றது.

அந்தவகையில் விலகல் முறையிலான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டிக்கு ஒஸ்திரியா தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, பிரான்ஸ், போலந்துக்கிடையிலான மற்றைய குழு டி போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், புதன்கிழமை(26) நடைபெற்ற இங்கிலாந்து, ஸ்லோவேனியாவுக்கிடையிலான குழு சி போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, டென்மார்க், சேர்பியாவுக்கிடையிலான குழு சி போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவைடைந்த நிலையில், டென்மார்க்கும் விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றது. டென்மார்க்கும், ஸ்லோவேனியாவுக்கும் அனைத்தும் சமமாக இருந்தபோதும் ஸ்லோவேனியாவின் உதவிப் பயிற்சியாளர் பெற்ற மஞ்சள் அட்டை வித்தியாசம் காரணமாகவே அவ்வணி விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெறத் தவறியது.

# கோப்பா அமெரிக்கா: காலிறுதியில் ஆர்ஜென்டீனா

ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்று வரும் தென்அமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கோப்பா அமெரிக்கா தொடரின் காலிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான ஆர்ஜென்டீனா தகுதி பெற்றுள்ளது.

சிலியுடனான குழு ஏ போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே ஆர்ஜென்டீனா காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஆர்ஜென்டீனா சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்டினெஸ் பெற்றிருந்தார்,







# முக்கொம்பன் ம.வி. பிரகாசித்தது

நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி பூநகரி கோட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் முக்கொம்பன் மகா வித்தியாலயம் பிரகாசித்துள்ளது.

மூன்று வெற்றிகளை பெற்றுள்ளன.

பூநகரி மத்திய கல்லூரி மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற போட்டிகளில் 20 வயதுப் பிரிவில் சம்பியனானதுடன், 18 வயதுப் பிரிவில் சம்பியனானதுடன், 16 வயதுப் பிரிவில் மூன்றாமிடத்தையும் முக்கொம்பன் மகா வித்தியாலயம் பெற்றுள்ளது.

# ஸபீஹா இரண்டாமிடம்

எம்.யூ.எம்.சனூன்



புத்தளம் வலய மட்டத்தில் இடம்பெற்ற 15 வயதுக்கு உட்பட்டோருக்கான சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 09இல் கல்வி கற்கும் மாணவி மொஹமட் சியாஜ் பாத்திமா சபீஹா இரண்டாமிடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எமாறெல்ட் சம்பியன் கிண்ணத் தொடர்:

# சம்பியனான பிளைங் ஹோர்ஸ்

எம்.எஸ்.எம்.ஸாகிர்




நிந்தவூர் எமாறெல்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், "எமாறெல்ட் சம்பியன் கிண்ணம் - 2024" என்ற நாமத்தில் நடாத்திய மென்பந்தாட்டத் தொடரில் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் சம்பியனானது.

அம்பாறை மாவட்டத்தின் பலம் வாய்ந்த 24 முன்னணிக்கழகங்களையிணைத்து அணிக்கு எட்டு வீரர்கள், 5 ஓவர்கள் என்ற அமைப்பில் நிந்தவூர் பொது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) நடாத்திய இத்தொடரின் இறுதிப் போட்டியில் நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகத்தை வென்றே பிளைங் ஹோர்ஸ் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஹிக்மா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் (20 பந்துகள்) 3 விக்கெட்டுகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 42 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பிளையிங் ஹோர்ஸ், ஒரு விக்கெட்டை மாத்திரமேயிழந்து 17 பந்துகளில் மூன்று பந்துகள் மீதமிருக்க 7 விக்கெட்டுகளால் வென்று கிண்ணத்தையும், 25,000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக் கொண்டனர்.

இவ்விறுதிப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் சிறந்த பந்துவீச்சாளராகவும் பிளையிங் ஹோர்ஸின் ஆஷிம், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸாஜித் ஆகியோர் தெரிவாகினர்.

இத்தொடரில் மூன்றாமிடத்தை நிந்தவூர் லகான் அணி பெற்றுக் கொண்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 27 ஜுன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.